www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V11Bio

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்

முதல் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

-----

வகுப்பு 11

உயிரியல்

கால அளவு: 3.00 மணிநேரம் | மதிப்பெண்கள்: 35

## பிரிவு - I (உயிரி - தாவரவியல்)

### பகுதி - I

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **8×1=8**

**ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) ஒரு ஆஞ்சியோஸ்பெர்ம் தாவரத்தின் ஒற்றைமடிய குரோமோசோம் எண்ணிக்கை 14 எனில் அதன் கருவூண் திசுவிலுள்ள குரோமோசோம் எண்ணிக்கை
அ) 28 ஆ) 42 இ) 56 ஈ) 7

2) ஒரு மலர் சூத்திரத்தில் % , ♀ $\bar{G}$ குறிப்பிடுபவை
அ) ஆரசமச்சீர், ஆண்மலர், கீழ்மட்ட சூலகப்பை
ஆ) இருபக்க சமச்சீர், பெண் மலர், மேல்மட்ட சூலகப்பை
இ) ஆரசமச்சீர், பெண் மலர், கீழ்மட்ட சூலகப்பை.
ஈ) இருபக்க சமச்சீர், பெண் மலர், கீழ்மட்ட சூலகப்பை

3) பொருத்துக சரியான வரிசையை தேர்ந்தெடுக்கவும்.
அ) தைலகாய்டுகள் - i) தட்டுவடிவப் பை போன்ற கோல்கை உறுப்புகள்
ஆ) கிரிஸ்டே - ii) சுருங்கிய அமைப்பை கொண்ட DNA
இ) சிஸ்டர்னே - iii) ஸ்ட்ரோமாவில் தட்டையான பை போன்ற சவ்வு
ஈ) குரோமாட்டின் - iv) மைட்டோகாண்ட்ரியாவில் உள்ள மடிப்புகள்
அ) அ - iii, ஆ - iv, இ - ii, ஈ -i ஆ) அ - iv, ஆ - iii, இ - i, ஈ -ii
இ) அ - iii, ஆ - iv, இ - i, ஈ -ii ஆ) அ - iii, ஆ - i, இ - ii, ஈ -iv

4) புரதம் அல்லாத பகுதிக் கூறுடன் செயல்படும் நொதி
அ) புராஸ்தடிக் தொகுதிகள் ஆ) அப்போ என்ஸைம்
இ) துணை நொதிகள் ஈ) முழு நொதி

5) புறணியின் கடைசி அடுக்கு
அ) அகத்தோல் ஆ) புறத்தோல் இ) பெரிசைக்கிள் ஈ) பித்

6) இருவிதையிலை தாவரதண்டின் ஒரே சீரான இரண்டாம் நிலை வளர்ச்சியின் போது முதல் நிலை சைலத்தின் நிலை என்ன?
அ) முதல் நிலை ஃபுளோயத்தை சுற்றிக் காணலாம்
ஆ) மையப்பகுதியில் நிலைத்து நிற்கிறது
இ) நசுக்கப்படும்
ஈ) நசுக்கப்படலாம் அல்லது நசுக்கப்படாமல் இருக்கலாம்

7) தாவரங்களின் வளர்ச்சி மற்றும் செயல்பாட்டிற்கு இன்றியமையாத தனிமம்
அ) மாலிப்டினம் ஆ) நைட்ரஜன் இ) இரும்பு ஈ) தாமிரம்

8) இரண்டு மூலக்கூறு சைட்டோசாலிக் NADH + $H^+$ ஆக்ஸிஜனேற்றம் அடையும்போது தாவரங்களில் உருவாகும் ATP மூலக்கூறுகளின் எண்ணிக்கை
அ) 4 ஆ) 6 இ) 8 ஈ) 3

## பிரிவு - II

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **4×2=8**

9) பயிர்சுழற்சி மற்றும் கலப்புப் பயிர் முறைகளில் உழவர்கள் லெகூம் வகை தாவரங்களைப் பயிரிடுவதேன்?

10) வேர் ஏறுகொடிகள் எவ்வாறு தண்டு ஏறுகொடிகளிலிருந்து வேறுபடுகின்றன?

11) வகைப்பாட்டின் வகைகள் யாவை?

12) $G_1$ நிலையில் செல்கள் பகுபடாமல் தடைபடக் காரணம் என்ன?

13) வரையறு : உள்ளீர்த்தல்

14) ஒளிச்சேர்க்கையின் சரியான சமன்பாட்டை எழுதவும்.

## பிரிவு - III

**ஏதேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 19க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **3×3=9**

15) திறந்த வகை வளர்ச்சி மற்றும் மூடிய வகை வளர்ச்சி என்றால் என்ன?

16) தாவர செல்லின் நுண்ணமைப்பை படம் வரைந்து பாகங்களை குறிக்கவும்.

17) சாற்றுக் கட்டை மற்றும் வைரக் கட்டை இடையேயான மூன்று வேறுபாடுகள் எழுதவும்.

18) நீர் ஊடக வளர்ப்பு என்றால் என்ன? அதன் தொழில்நுட்பத்தை விளக்கவும்.

19) கூட்டுக்கனியை திரள் கனியிலிருந்து வேறுபடுத்துக.

## பிரிவு - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **2×5=10**

20) அ) இலை அடுக்கமைவு என்றால் என்ன? அதன் வகைகளை விளக்கவும். **(அல்லது)**
ஆ) DNA வின் பண்பினை எழுது.

21) அ) சவ்வூடு பரவலை ஏதேனும் ஒரு சோதனை மூலம் விளக்கவும். **(அல்லது)**
ஆ) கிளைக்காலைசிஸின் வழித்தடத்தை விவரிக்கவும்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



V11Bio

## பிரிவு - II (உயிரி - விலங்கியல்)

### பகுதி - I

8×1=8

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) ஆண்புலியை பெண் சிங்கத்துடன் இனக்கலப்பில் ஈடுபடுத்தும் போது மலட்டுத்தன்மையுடன் .......... உருவாகிறது.
அ) ஹின்னி ஆ) கோவேறுக் கழுதை இ) லைகர் ஈ) டைகான்

2) நான்கு அறை இதயம் இதில் காணப்படும்
அ) முதலை ஆ) பல்லி இ) பாம்பு ஈ) தேள்

3) கீழ்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்வு செய்யவும்
அ) மண்புழுவில் ஒரு இணை ஆண் இனத்துளை உள்ளது.
ஆ) மண்புழுவின் இடப்பெயர்ச்சிக்கு நுண்முட்கள் பயன்படுகின்றன.
இ) மண்புழுவின் உடற்சுவரில் வட்டத்தசைகள் மற்றும் நீள்தசைகள் உள்ளன.
ஈ) டிப்ளோசோல் எனப்படுவது மண்புழு குடலின் ஒரு பகுதியாகும்.

4) உட்சுவாசத்தின் போது உதரவிதானம்
அ) விரிவடைகிறது ஆ) சுருங்கித் தடையாகிறது
இ) தளர்ந்து மேற்குவிந்த அமைப்பைப் பெறுகிறது
ஈ) எந்த மாற்றமும் இல்லை

5) மால்பீஜியன் நுண்குழல்கள் எதிலுள்ள கழிவுப்பொருட்களை வெளியேற்றுகின்றன.
அ) வாய் ஆ) உணவுக்குழல் இ) ஹீமோலிம்ப் ஈ) உணவுப்பாதை

6) எது 'கல்லின் நோய்' என்றும் அழைக்கப்படுகிறது.
அ) அக்ரோமெகாலி ஆ) ரேக்ஸிடீமா இ) கிரிடினிசம் ஈ) இராட்சத்தன்மை

7) ஏரிபட்டு - லிருந்து பெறப்படுகின்றது.
அ) அட்டாகஸ் ரிசினி ஆ) அட்டாக்ஸ் மைலிட்டா
இ) லேஸ்ஸிஃபெர் லேக்கா ஈ) நொசிமா பாம்பிசிஸ்

8) பத்தி -1 இல் நோய்களும் பத்தி -2 இல் அதற்கான அறிகுறிகளும் தரப்பட்டுள்ளன. சரியான இணையைத் தேர்ந்தெடு.

| பத்தி -1 | பத்தி -2 |
|---|---|
| P) ஆஸ்துமா | - அடிக்கடி உருவாகும் மார்பு சளி |
| Q) எம்ஃபைசீமா | - காற்று நுண்ணறைகளில் வெள்ளையணுக்கள் குழுமுதல் |
| R) நிமோனிமா | - ஒவ்வாமை |

அ) P - iii Q - ii R - i ஆ) P - iii Q - i R - ii
இ) P - ii Q - iii R - i ஈ) P - ii Q - i R - iii

### பகுதி - 2

4×2=8

ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 14க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

9) சிற்றினம் என்றால் என்ன? சிற்றனக் கோட்பாட்டில் சார்லஸ் டார்வின் பங்கு யாது?
10) மண்புழுவின் பெரிஸ்டோமியம் மற்றும் புரோஸ்டோமியத்தை வேறுபடுத்துக.
11) உடல்பருமன் சுட்டு அல்லது உடல் எடைக் குறியீடு என்றால் என்ன? இயல்பாக வளர்ந்த மனிதனின் BMI அளவு என்ன?
12) வாயுக்களின் ஊடுருவல் நுண் காற்றுப்பை பகுதிகளில் மட்டுமே நடைபெறுகிறது. சுவாச மண்டலத்தின் வேறு எந்தப் பகுதியிலும் இது நடைபெறுவதில்லை. விவாதிக்கவும்.
13) தைராய்டு சுரப்பியின் அசினி பற்றி எழுதுக.
14) செயற்கை முறை விந்தூட்டத்தின் பயன்கள் யாவை?

### பகுதி - 3

3×3=9

ஏதேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 19க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

15) ஹார்மோன் என்பவை வேதித் தூதுவர்கள் எனப்படும். வாக்கியத்திற்கு வலுசேர்க்கவும்.
16) கோராய்டு வலைப்பின்னல் மூளை தண்டுவடத் திரவத்தைச் சுரக்கிறது. அதன் செயல்பாடுகளை வரிசைப்படுத்துக.
17) நிபந்தனையற்ற அனிச்சைசெயல் மற்றும் நிபந்தனை அனிச்சை செயல் வேறுபடுத்துக.
18) இதய ஒலிகள் என்றால் என்ன? அவை எப்போது, மற்றும் எப்படி உண்டாக்கப்படுகின்றன?
19) வெள்ளை அடிப்போஸ்திசுவைப் பழுப்பு அடிப்போஸ் திசுவிலிருந்து வேறுபடுத்துக.

### பகுதி - 4

2×5=10

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

20) பாரம்பரிய வகைப்பாட்டு கருவிகள் பற்றி விரிவான விடையளிக்கவும்.

(அல்லது)

உட்சுவாசம் மற்றும் வெளிச்சுவாசத்தில் நடைபெறும் படி நிலைகள் யாவை?

21) இதயத் துடிப்பு என்றால் என்ன? இத்துடிப்பு தோன்றல் மற்றும் கட்டுப்படுத்துதல் நடைபெறும் முறையை படத்துடன் விவரி.

(அல்லது)

மனித கண்ணின் குறுக்கு வெட்டுத் தோற்றம் படம் வரைந்து, பாகங்களைக் கூறிக்கவும்.

- - - - -

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com